# அரசு மேல்நிலைப்பள்ளி கருவேப்பிலங்குறிச்சி

## தாவர மற்றும் விலங்கு ஹார்மோன்கள்

XL58U3

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஜிப்ரல்லின்களின் முக்கிய விளைவு __________
   அ. மரபியல் ரீதியான நெட்டைத் தாவரங்களைக் குட்டையாக்குவது.
   ஆ. குட்டைத் தாவரங்களை நீட்சி அடையச் செய்வது
   இ. வேர் உருவாதலை ஊக்குவிப்பது
   ஈ. இளம் இலைகள் மஞ்சளாவது

2. நுனி ஆதிக்கத்தின் மீது நேர் விளைவை உருவாக்கும் ஹார்மோன்
   அ. சைட்டோகைனின் ஆ. ஆக்சின்
   இ. ஜிப்ரல்லின் ஈ. எத்திலின்

3. பின்வருவனவற்றுள் எந்த ஹார்மோன் இயற்கையாக தாவரங்களில் காணப்படவில்லை?
   அ. 2,4 D ஆ. GA 3
   இ. ஜிப்ரல்லின் ஈ. IAA

4. அவினா முளைக்குருத்து உறை ஆய்வு __________ என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.
   அ. டார்வின் ஆ. N ஸ்மித்
   இ. பால் ஈ. F.W வெண்ட்

5. கரும்பில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவை அதிகரிக்க அவற்றின் மீது __________ தெளிக்கப்படுகிறது.
   அ. ஆக்சின் ஆ. சைட்டோகைனின்
   இ. ஜிப்ரல்லின்கள் ஈ. எத்திலின்

6. LH ஐ சுரப்பது __________.
   அ) அட்ரினல் சுரப்பி
   ஆ) தைராய்டு சுரப்பி
   இ) பிட்யூட்டரியின் முன் கதுப்பு
   ஈ) ஹைபோ தலாமஸ்

7. கீழுள்ளவற்றுள் நாளமுள்ளச் சுரப்பியை அடையாளம் காணவும்.
   அ) பிட்யூட்டரி சுரப்பி ஆ) அட்ரினல் சுரப்பி
   இ) உமிழ் நீர் சுரப்பி ஈ) தைராய்டு சுரப்பி

8. கீழுள்ளவற்றுள் எது நாளமுள்ளச் சுரப்பியாகவும், நாளமில்லாச் சுரப்பியாகவும் செயல்படுகிறது?
   அ) கணையம் ஆ) சிறுநீரகம்
   இ) கல்லீரல் ஈ) நுரையீரல்

9. தலைமைச் சுரப்பி எனப்படுவது எது?
   அ) பினியல் சுரப்பி ஆ) பிட்யூட்டரி சுரப்பி
   இ) தைராய்டு சுரப்பி ஈ) அட்ரினல் சுரப்பி

### II. கோடிட்ட இடங்களை நிரப்பு.

1. செல் நீட்சியடைதல், நுனி ஆதிக்கம் ஆகியவற்றை உருவாக்குவதும், உதிர்தலை தடை செய்வதும் __________ ஹார்மோன் ஆகும்.

2. தாவர உறுப்புகளின் உதிர்தல் மற்றும் கனி பழுப்பதை துரிதப்படுத்தும் வாயு நிலை ஹார்மோன் __________ ஆகும்.

ஆக்கம்; ரா.மணிகண்டன் பட்டதாரி ஆசிரியர்